7.8.2026 O.S. 457/2020 வா.சா.1 ரஜப் முகம்மது

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். 1முதல் 3 பிரதிவாதிகள் என் மனைவியின் சகோதரர்கள் என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக தென்காசி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.421/2010 என வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கு 13.3.2015ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பானது என்றால் சரிதான். அதில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. மேல்முறையீடு வழக்கு எண் சொல்லமுடியுமா என்றால் ஞாபகமில்லை. எந்த வருடம் மேல்முறையீடு செய்யப்பட்டது என்றால் 2026ம் ஆண்டு செய்யப்பட்டது. அந்த வழக்கும் இந்த வழக்கு சொத்தும் ஒரே சொத்து என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு இந்த வழக்கு சொத்தை பொறுத்து 2018ம் ஆண்டில் அ.வ.எண்.49/2018 என மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் இடைநிலை விண்ணப்பம் எண்.1/19ன்படி படி வழக்கை திரும்ப பெற்று கொண்டேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ1 ஆவணத்தில் மேற்கோப்பு சாமான்கள் என்ற வாசகம் இடம் பெற்றுள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. கடை என்று போட்டுள்ளது. 2002ம் ஆண்டில் பெறப்பட்ட கிரைய ஆவணமான வா.சா.ஆ2 ஆவணத்தில் மேற்கோப்பு சாமான் என்ற வாசகம் இடம்பெறவில்லை என்றால் சரிதான். மேல்மாடிக்கு புழங்கி கொள்ளும் பாத்தியதை மட்டும் தான் கிரைய ஆவணம் மூலம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். 2ம் தளத்திற்கு செல்லும்படிகட்டில் இரும்பு கேட் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரும்பு கேட்டின் சாவிகள் 1 முதல் 3 பிரதிவாதிகள் வசம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் மேல்தளத்திற்கு போனது கிடையாது என்றால் முன்பு போய் உள்ளேன். தற்போது போகவில்லை. கடைசியாக மேல்தளத்திற்கு நான் வழக்கு தாக்கல்

செய்வதற்கு முன்பு சென்றேன். அப்போது கேட் போடப்பட்டு உள்ளதா என்றால் தெரியாது. வா.சா.ஆ 1,2 ஆவணத்தின் வாசகப்படி கீழ்தளம் , முதல்தளம் மட்டுமே எனக்கு கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்றும், 2ம் மேல்தளத்தில் எனக்கு எந்தவித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 2ம் மேல்தளத்தில் வீடு கட்டி அவர் குடும்பத்துடன் வசித்து வருகிறார் என்றால் சரிதான். அந்த வீட்டின் மதிப்பு ரூ.20 லட்சம் இருக்குமா என்றால் இருக்கலாம். 1ம் பிரதிவாதி எத்தனை சதுரஅடியில் கட்டிம் கட்டியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அவரது பாகபிரிவினையில் அவருக்கு 597 சதுர அடி கிடைத்தது. 2ம் மேல்தளத்தை நான் ஒரு போதும் அனுபவம் செய்தது இல்லை என்றாலும், நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

(ஒம்)K.சுதா ராணி,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.